**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் நாள் சனிக்கிழமை
இ.ம.எண்.35/2026 இன் அ.வ.எண்.115/2019

கேசவன் ...... மனுதாரர்/வாதி

/எதிர்/

கணேசன் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதி

இந்த இடைக்கால மனு என் முன்னர் இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.காளிதாஸ் அவர்கள் அஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.ராமதாஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவண்ங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்

<u>உத்தரவு</u>

மனுதாரரால் OS.115/2019 வழக்கையும் OS.113/2019 வழக்கையும் Joint Trail ஆக நடத்த கோரி உரிமையியல் நடைமுறைசட்டம், பிரிவு 151 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர் தனக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் தேடி அசல் வழக்கை தாக்கல் செய்து உள்ளதாகவும், அதில் தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறதாகவும், வழக்கு விசாரணைக்கு நிலுவையில் இருந்து வருகிறதாகவும், இவ்வழக்கு சொத்தை சேர்ந்த ஒரே சர்வே எண் கொண்ட சொத்து குறித்து சேகர் என்பவர் நீதிமன்றத்தில் OS.113/2019 வழக்கு தாக்கல் செய்து உள்ளதாகவும், அதிலும் தான் வக்கீல் வைத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறதாகவும், அவ்வழக்கும் விசாரணைக்காக இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும், இவ்வழக்கின் பொருண்மையும் OS.115/2019 இன் பொருண்மையும் ஒரே பிரச்சனை குறித்தது என்றும், வாதிகள் மட்டுமே வெவ்வேறு நபர்கள் என்றும், இவ்விரு வழக்கிலும் பிரதிவாதியாக இருந்து தான் கட்சி செய்து வருகிறேன் என்றும். வழக்கு சொத்து குறித்த பிரச்சனை இவ்விரு வழக்கிலும் ஒரே மாதிரி என்றும், இவ்விரு வழக்குகளிலும் வழக்கு மூலங்களும் ஒரே தேதி என்றும், எனவே இவ்விரு வழக்குகளை ஒன்றாக இணைத்து பொதுவான விசாரணை சாட்சியம் பொதுவான ஆவணங்கள் குறியீடு செய்தும் கூட்டு விசாரணையாக நடத்தி தீர்வு காண வேண்டி இருக்கிறதாகவும், இவ்விரு வழக்குகளையும் தனித்தனியே நடத்தினால் முரண்பாடுடைய தீர்ப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், எனவே OS.113/2019 வழக்கை இவ்வழக்குடன் இணைத்து சாட்சியமாக பதிவு செய்யவும் பொதுவான ஆவணங்கள் குறியீடு செய்தும் Joint trail ஆக நடத்த உத்தரவு செய்ய வேண்டியது அவசியமாகிறது இல்லையெனில் தனக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும்

என குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிரிருரையின் சுருக்கம்:**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையில் Joint trial அனுமதிக்கப்பட வேண்டுமெனில் வழக்கு சொத்து வியாஜியமூலம், ஆவணங்கள் அனைத்தும் ஒன்றாக இருக்க வேண்டும், ஆனால் இவ்வழக்கில் மேற்கண்ட காரணங்கள் யாவும் ஒற்றுபோவாததால் மனுதாரர் தாக்கல் செய்யும் மனு தள்ளுபடிக்கு அருகமானது என்றும், இரு வழக்குகளின் வழக்கு சொத்துகள் முற்றிலும் வேறுபட்டது O.S.115/2019 மற்றும் O.S.113/2019 ஆகிய வழக்குகளில் சொத்து விவரங்கள் வேறுபட்டவை, எல்லைகள் வேறுபட்டவை, பரப்பளவு வேறுபட்டது என்றும், கோரிக்கைகள் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை என்றும், உபய தரப்பினரும் ஒன்று கிடையாது என்றும், எனவே இரண்டு வழக்குகளும் ஒரே சொத்துடன் தொடர்புடையவை அல்ல என்றும், சொத்து வேறுபட்ட நிலையில் Joint Trial நடத்த இயலாது என்றும், வேண்டுமானால் Simultaneoulsy ஆக நடத்திக்கொள்ளலாம் என்றும், வழக்கில் தொடர்புடைய O.S.no.145/2019 வழக்கினையும் சேர்ந்து நடத்த Joint Trial ஆக நடத்த 16.09.2021 ல் உத்திரவிடப்பட்டுள்ளது என்றும், உத்தரவை மதிக்காமல் மனுதாரர் O.S.145/2019 வழக்கினை வேண்டுமென்றே கடந்து 12.12.2023 ம் தேதியில் தள்ளுபடிக்கு விட்டுவிட்டதாகவும், O.S145/2019 வழக்கினை restore செய்ய

மனுதாரர் 09.01.2024 ல் Order 9 Rule 9 படி மனுதாக்கல் செய்து உள்ள நிலையில் அசல் வழக்கில் PW1 ஐ குறுக்கு விசாரணை செய்ய தடை செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே Joint Trial அனுமதிக்கப்பட்டால் தொடர்பற்ற சாட்சிகள் சேர்க்கப்படும், என்றும், சான்றுகள் குழப்பமடையும் என்றும், வழக்கின் மையப்பிரச்சனை மங்கும் மாறாக தேவையற்ற சிக்கல்கள் மற்றும் தாமதத்தை உருவாக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர்களுக்கு அசல் வழக்கில் கூடிய வரக்கூடிய நல்ல கட்சி எதுவும் இல்லாததால் வழக்கை இழுத்து அடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணதுடன் பொய்யான அம்சங்களை கொண்டு மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்களின் செய்கை சட்டத்துக்கும் நியாயத்துக்கும் முரணானது என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. தீர்வு

அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைக்காக நிலுவையில் இருப்பதாகவும், இவ்வழக்கு சொத்தை சேர்ந்த ஒரே சர்வே எண் கொண்ட சொத்து குறித்து சேகர் நீதிமன்றத்தில் OS.113/2019 வழக்கு தாக்கல் செய்து விசாரணைக்காக உள்ளதாகவும், இரு வழக்கிற்கும், பொருண்மை ஒரே பிரச்சனை குறித்தது என்றும், வாதிகள் மட்டுமே

வெவ்வேறு நபர்கள் என்றும், இவ்விரு வழக்கிலும் பிரதிவாதியாக இருந்து தான் கட்சி செய்து வருகிறதாகவும், இரு வழக்குகளிலும் வழக்கு மூலங்களும் தேதியும் ஒன்று என்றும், அதனால் இரு வழக்குகளையும் ஒன்றாக இணைத்து பொதுவான விசாரணையில் பொதுவான சாட்சிய ஆவணங்கள் குறியீடு செய்து கூட்டு விசாரணையாக நடத்தி தீர்வு காண வேண்டி இருக்கிறதாகவும், இவ்விரு வழக்குகளையும் தனித்தனியே நடத்தினால் முரண்பாடுடைய தீர்ப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், Joint trail ஆக நடத்த உத்தரவு செய்ய வேண்டப்பட்டுள்ளதையும், மாறாக Joint trial அனுமதிக்கப்பட வேண்டுமெனில் வழக்கு சொத்து வியாஜியமூலம், ஆவணங்கள் அனைத்தும் ஒன்றாக இருக்க வேண்டும் என்றும், இரு வழக்குகளின் வழக்கு சொத்துகள், எல்லைகள், பரப்பளவு முற்றிலும் வேறுபட்டவை என்றும், உபய தரப்பினரும் கோரிக்கைகள் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை என்றும், சொத்து வேறுபட்ட நிலையில் Joint Trial நடத்த இயலாது என்றும், வேண்டுமானால் Simultaneoulsy ஆக நடத்திக்கொள்ளலாம் என்றும் ஆட்சேபிக்கப்பட்டிருப்பதையும் மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கும், O.S.145/2019 வழக்கினையும் சேர்ந்து நடத்த Joint Trial 16.09.2021 ல் உத்திரவிடப்பட்டிருப்பதை மதிக்காமல் மனுதாரர் O.S.no.145/2019 வேண்டுமென்றே 12.12.2023 ல் தள்ளுபடிக்கு விட்டுவிட்டதாகவும், restore செய்ய மனுதாரர் 09.01.2024 ல் Order 9 Rule 9 படி மனுதாக்கல் செய்து உள்ள நிலையில் அசல் வழக்கில் PW1 ஐ குறுக்கு விசாரணை செய்ய தடை செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதையும், முக்கியமாக Joint Trial

அனுமதிக்கப்பட்டால் தொடர்பற்ற சாட்சிகள் சேர்க்கப்பட்ட சான்றுகள் குழப்பமடைந்து தாமதத்தை உருவாக்கும் என்றும் ஆட்சேபிக்கப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இருவழக்குகளையும் வழக்கு சொத்து அயிட்டங்கள் வேறுபட்டுள்ளதை நீதிமன்றம் காண்கிறது. மேலும், இரு வழக்கிலும் வாதிகள் வெவ்வேறானவர்கள் என எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டிருப்பதின்படி பொதுவான விசாரணை அனுமதிக்கும்பட்சத்தில் வழக்குகளில் சாட்சி சான்றாவணம் குழப்பம் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாக இந்நீதிமனறம் கருதுவதாலும் இருவழக்கிலும் சொத்துக்கள் வேறுபட்டு இருப்பதன் காரணமாகவும், ஏற்கனவே **Joint trial** உத்தரவு வழங்கப்பட்ட வழக்கை வருகை தவறுகைக்காக தள்ளுபடி செய்யவிட்டிருப்பதால் மேலும் தரப்பினர்களால் ஏற்படுத்தப்படும் தாமதத்தை தவிர்க்கும்படிக்கும் நீதியின் நலன்கருதி இம்மனுவை தள்ளுபடி செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7. முடிவாக, மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு

வ.வி.எண்.35/2026

இன்

அ.வ.எண்.115/2019

நாள்.07.03.2026